# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## மக்கள் வங்கியின் விசேட கடன் திட்டத்தின் கீழ அரச பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களுக்கு (உ.க.நி) தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் ஒரு மடிக்கணினியை கொள்வனவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள்.

1) பாரம்பரிய கல்வி என்ற கோட்பாடு கடந்த சில வருடங்களில் முற்றிலும் மாறிவிட்டது. ஒரு வகுப்பறையில் பௌதீக ரீதியாக இருப்பது இப்போது புதிய சகாப்தத்தில் நுழையும் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரே ஒரு கற்றல் தேரிவு அல்ல - இது இணையதளத்தினுாடான கல்விப்புரட்சி.

2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களின் தேவையை அறிந்து, 2019/2020 கல்வியாண்டிற்காக அரச பல்கலைக்கழகங்கள் / உ.க.நி. க்கு புதிதாக நுழைபவர்களுக்காக மக்கள் வங்கியுடன் இணைந்து விசேட மடிக்கணினி கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

3) தகுதி – 2019 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) பரீட்சையின் Z-புள்ளியின் (Z-score) அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் / உ.க.நி இல் கல்வியாண்டுக்கு 2019/2020 க்கு பதிவு செய்த மாணவர்கள்.

**மடிக்கணினி கடன் திட்டத்தின் சுருக்கம்**

| | |
|---|---|
| அதிகபட்ச கடன் தொகை | ரூபா. 100,000.00 |
| திருப்பிச் செலுத்தும் காலம் | மூலதனத்தினை திருப்பிச் செலுத்துவதற்கான நான்கு ஆண்டுகள் சலுகைக்காலம் உட்பட ஆறு (06) ஆண்டுகள். |
| கடன் ஒப்பந்தம் - தேர்வு I | கடனை திருப்பிச் செலுத்துவதற்கு விண்ணப்பதாரர் மக்கள் வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கை வைத்திருக்க வேண்டும் மற்றும் மகாபொல (Mahapola) / பேசரி (Bursary) தவணைகள் அதே சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். |
| கடன் ஒப்பந்தம் - தேர்வு II | விண்ணப்பதாரர் மகாபொல / பேசரியைப் பெறவில்லை என்றால், அவர்கள் வங்கியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி திருப்பிச் செலுத்தும் திறன் கொண்ட இணை கடன் பெறுநரை அறிமுகப்படுத்த வேண்டும். |

4) பரிந்துரைக்கப்பட்ட விற்பனையாளர்களின் பட்டியல் (மடிக்கணினி வழங்குநர்கள்) அவர்களுடைய விவரக்குறிப்புகள் மற்றும் மடிக்கணினிகளின் விற்பனை விலைகள் 2021 பெப்ரவரி 09 முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விவரக்குறிப்புகளின் அடிப்படையில் மடிக்கணினிகள் ரூபா. 80,500/- முதல் 177,500/- வரையான விலைகளில் கிடைக்கின்றது.

5) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விவரக்குறிப்புகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக மாணவர்கள் ஒரு பொருத்தமான மடிக்கணினியைத் தேர்வு செய்து பரிந்துரைக்கப்பட்ட விற்பனையாளரிடமிருந்து ஒரு விவரப்பட்டியலை (Performa Invoice) பெற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து விற்பனையாளர்களும் விவரப்பட்டியலுடன் விவரக்குறிப்புகள் மற்றும் உத்தரவாத விவரங்களை மிக தெளிவாக இணைக்க வேண்டும். அந்தந்த விற்பனையாளர்களால் மாணவர்களுக்கு இறுதி விலைப்பட்டியலுடன் முறையான உத்தரவாத சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்.

6) இந்த அறிவுறுத்தலுடன் இணைக்கப்பட்டுள்ள **விண்ணப்பப் படிவத்தை** மாணவர்கள் முறையாக பூர்த்தி செய்து அதனுடன் **ஒரு உள்ளக மாணவராக பதிவு செய்வற்காக பல்கலைக்கழகம் / ப.மா.ஆ இருந்து பெறப்பட்ட மின்னஞ்சல் / கடிதம்** மற்றும், **தேசிய அடையாள அட்டையின்** நகலையும் மக்கள் வங்கியின் விருப்பமான கிளைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

7) வங்கி தொடர்புடைய விவரங்களுடன் விற்பனையாளருக்கு கொள்முதல் ஆணையை நேரடியாக வழங்கும் மற்றும் மடிக்கணினி பெற்றுக்கொள்ள தயாராக இருக்கும்போது காசோலையை மாணவர்களுக்கு வழங்கும். மாணவர், விற்பனையாளர் மற்றும் வங்கி ஆகியவற்றிற்கிடையில் தேவையான தகவல் பரிமாற்றம் முறையாக நடைபெறும்.

8) வருடாந்த வட்டி விகிதம் 7.75% ம் சலுகை காலத்தில் (அதிகபட்சம் 4 ஆண்டுகள்) வட்டியை மட்டுமே வசூலிக்க வேண்டும். மூலதனத்தினை திருப்பிச் செலுத்துவது 05 ஆம் ஆண்டு முதல் தொடங்கும். சலுகைக் காலம் இல்லாமல் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு மாணவர் கோருகின்ற நிகழ்வுகள், ஒரு சாதாரண கடன் வசதியாக வழங்கப்பட வேண்டும், திருப்பிச் செலுத்துதல் பணம் கொடுத்து அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

9) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து மடிக்கணினி கொள்வனவு செய்யப்படல் வேண்டும். கடனின் அதிகபட்ச தொகை ரூபா. 100,000/- ஆகும். ஒரு மாணவரின் மடிக்கணினியின் பெறுமதி கடன் தொகையை விட அதிகமாக இருந்தால், மீதமுள்ள தொகையை மாணவரே ஏற்க வேண்டும். அதற்கமைவாக கடன் தொகையை விட மீதமான தொகையை வங்கியில் வைப்புச் செய்தபின் அல்லது விற்பனையாளருடன் வேறு எந்த ஏற்பாட்டையும் செய்திருப்பின் மொத்த விலைப்பட்டியல் பெறுமதிக்கு வங்கி நேரடியாக விற்பனையாளருக்கு ஒரு பணக்கொடுப்பனவு ஆணையை வழங்க வேண்டும்.

10) கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு விண்ணப்பதாரர் மக்கள் வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கினை வைத்திருக்க வேண்டும் மற்றும் மகாபொல (Mahapola) / பேசரி (Bursary) தவணை கொடுப்பனவுகள் அதே சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளை செய்ய முடியாவிட்டால், மாணவர்களுக்கு வங்கி வழங்கிய அறிவுறுத்தல்களின்படி திருப்பிச் செலுத்தும் திறன் கொண்ட இணை கடன் பெறுநரை அறிமுகப்படுத்த வேண்டும்.

11) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் மைக்ரோசாப்ட்க்கும் (Microsoft) இடையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக பரிந்துரைக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து மடிக்கணினிகளை கொள்வனவு செய்த அனைத்து மாணவர்களும் மைக்ரோசாப்ட் விண்டோஸ் 10 பணி செயல் முறைமை (Microsoft Windows 10 Operating System) மற்றும் ஆபிஸ் 365 சேவையை (Office 365 Service) வழங்கும் மைக்ரோசா.ஃப்ட் எம் 365 சேவைக்கு (Microsoft M365 Service) இலவசமாக பதிவு செய்யலாம்.

12) புதிதாக பல்கலைக்கழகங்களுக்கு நுழைந்தவர்கள் மடிக்கணினி வாங்குவதற்கான இலகு கடன் வசதியாக இந்த விசேட கடன் திட்டத்தை செயல்படுத்த மக்கள் வங்கி இணங்கியுள்ளது. எனவே வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடனை திருப்பிச் செலுத்துவது மாணவர்களின் பொறுப்பாகும்.